விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 094 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 09 வியாழக்கிழமை (23.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829








## ஐ.எம்.எப் உடன்படிக்கையை
# நடைமுறைப்படுத்த ஆதரவளியுங்கள்

### எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



- வாங்கிய கடனில் இளைஞர்களின் எதிர்காலம் கட்டியெழுப்பப்படும்.
- நிதி உதவியை பெற்றுக்கொள்வதற்கு மக்களின் அர்ப்பணிப்பு பெரும் பலமாக இருந்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.எம்.எப் இன் 10 நிபந்தனைகள்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான 10 நிபந்தனைகளுக்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த 10 நிபந்தனைகள் பின்வருமாறு,

1. ஏப்ரல் மாதத்தில் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வழங்குதல்.
2. ஊழல் தடுப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும்.
3. அரசின் வருவாயை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
4. அதிக வருமானம் ஈட்டுபவர்களுக்கு வரி விதிப்பு.
5. 2025இல் செல்வ வரி மற்றும் சொத்து பரிமாற்ற வரி அறிமுகம்.
6. 2023 இறுதிக்குள் பணவீக்கத்தை 12% - 18% ஆகக் குறைத்தல்.
7. 2023 ஜூன் இல் இறக்குமதி மற்றும் 11

## பாடசாலை அனுமதிக்கான
## தரம் 5 புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

2022ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாடசாலை அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியாகியுள்ளன.

சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலங் 11

## முறையான ஆய்வு, விவாதம் இல்லாமல்
# ஐ.எம்.எப் அறிக்கையை ஏற்க முடியாது
### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

சரியான ஆய்வு மற்றும் முறையான பாராளுமன்ற விவாதம் இல்லாமல் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகரில்
## கிணற்றில் விழுந்த 11 வயது சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் விழுந்த 11 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காரைநகர் இலகடி பகுதியில் இச்சம்பவம் நேற்று 11

## 100 ரூபாயினால்
## பெற்றோல் விலை குறைவடையும்?

(கொழும்பு)

100 ரூபாயினால் பெற்றோல் விலை குறைவடையும் சாத்தியம் காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அடுத்த மாதம் முதல் எரிபொருள் விலையை குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருளின் விலை எதிர்வரும் 11

## மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு
### உடுப்பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மேசன் வேலையில் ஈடுபட்டிருந்தவேளை மின்சாரம் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிழந்துள்ளார்.

இதில் காரைநகரைச் சேர்ந்த ஒருபிள்ளையின் தந்தையான 11

## யாழ்.நாகர்கோவிலில்
## 10 படகுகள் தீக்கிரை

(கரணவாய்)

யாழ்ப்பாணம்- நாகர்கோவில் மேற்கு பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 படகுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 11



## தேர்தல் தொடர்பில் இன்று தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்துவது குறித்து இன்று கூடவுள்ள கூட்டத்தின்போது தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (ம-7)

## வவுனியாவில் இளைஞன் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் 24 வயது இளைஞன் ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகபொலி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்



இன்று 60ஆவது அகவை காணும் எமது வியாபார நிலைய உரிமையாளர்

உயர்திரு.
**தாதபிள்ளை உதயரட்ணம்**

அவர்களை வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**வியாபார நிலையத்தினர்**
**81, இலுப்பையடிச் சந்தி, யாழ்ப்பாணம்.**

(15011)


## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கிளிநொச்சி வளாகம், அறிவியல் நகர்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பிரதிப் பதிவாளர் பணிமனையில் 10.04.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பொறியியற் பீட உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| விவசாய பீட உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| தொழிநுட்ப பீட உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| விவசாயபீட புதிய உணவகம் (Juice Canteen) | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |
| ஆண்கள் விடுதி உணவகம் | கிளிநொச்சி வளாகம் / அறிவியல் நகர் |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் **9700 0006 0000 268** இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக் கணக்கு இலக்கம் **9700 0006 0000 276** இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து **கேள்விப் படிவங்களை இப் பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.** கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகபிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல : 021 206 0180) பெற்றுக் கொள்ளலாம்.

(C-6213)

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


## வட மாகாண மக்களுக்கு ஓர் நற்செய்தி

**ஐரோப்பிய நாடுகளுக்கான விசிட் விசா ஒரு மாத காலத்தில் ஒழுங்குபடுத்தி தரும் நிறுவனமான**

**Hybrid International Hub (pvt) Ltd**

லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியூஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கான மாணவர் விசா 100% உத்தரவாதத்துடன் முற்கட்டணம் ஏதுமற்ற Sponsor கட்டணங்களற்ற சேவையினையும் வழங்கி வருகிறார்கள்.

நேர்த்தியானதும் நம்பகரமானதுமான சேவையினை பெற்றுக் கொள்ளுங்கள்

(C-6210)

**Contact Us**
LIC Tower - 1st Floor
No.36, Vaithilingam Thuraisamy Road
(Near to Vembady High School)
TP No : 021 222 1265 / 076 250 0098
E.Mail : hybridinternational37@gmail.com



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127


## பொது அறிவித்தல்
## மாநகர சபை யாழ்ப்பாணம் பாதீடு - 2023

யாழ். மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2023.03.23 தொடக்கம் 2023.03.29 ஆம் திகதி வரை

- யாழ் மாவட்டச் செயலகம்
- யாழ் பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ் மாநகர சபை - பொதுசனத் தொடர்பு பகுதி
- யாழ் பொது நூல்நிலையம்
- நவீன சந்தை - வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ்வரைப் பாதீட்டு வரைபினை பரிசீலித்து இதனை மேலும் முன்னேற்ற கரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகள் என்பவற்றை எதிர்வரும் 2023.03.29 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் மாநகர சபைச் செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இ.த.ஜெயசீலன்
ஆணையாளர்,
மாநகர சபை , யாழ்ப்பாணம்.

2023.03.23 (C-6211)

சிவமயம்



## பகிரங்க ஏலம் விடுதல்
## சிறுபோகம் - 2023 ஆலய வயற்காணி குத்தகைக்கு விடுதல்
## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் A9 வீதி கிளிநொச்சி

எமது ஆலயத்திற்கு சொந்தமான கீழ்க் குறிப்பிட்ட காணிகள் எதிர்வரும் 26.03.2023 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

- **மருதநகர் - 02 ஏக்கர்**
- **பெரியபரந்தன் LB2.D5 - 10 ஏக்கர்**
- **பெரியபரந்தன் D7 - 04 ஏக்கர்**

**முக்கிய குறிப்பு**

- ஏலத்தில் காணியைப் பெறுபவர் பி.ப. 2.00 மணியளவிற்கு முன் முழுப் பணத்தையும் செலுத்துதல் வேண்டும்.
- காசோலைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.
- ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறப்பட்டு மொத்த வயற்காணியின் பெறுமதி கணிப்பிடப்படும்.
- சகல விவசாயிகளின் நேரத்தையும் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது சமூகம் தரவும்.

**ஆலய பரிபாலன சபை சார்பில்**

| ச.ஸ்ரீகௌரிபாலா | மா. சிவராசா | சு.வரதராசா |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| 077 602 7147 | 077 540 7448 | 077 916 7716 |

(C-6207)


# சேவைநலன் பாராட்டு

திருமதி
**ஸ்ரீசுகந்தி தனசீலன்**
( SLTS I, B.A, Dip. in Ed.)



எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி இன்று (23.03.2023) ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி ஸ்ரீசுகந்தி தனசீலன் அவர்கள் தமது ஓய்வுக்காலத்தில் சகல நலன்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

| | |
|---|---|
| யா/சென் அன்ரனீஸ் வித்தியாலயம் | 11.01.1993 - 21.01.1996 |
| கிளி/மத்திய கல்லூரி | 22.01.1996 - 25.04.1997 |
| மன்/சென் சேவியர் மகளிர் கல்லூரி | 26.04.1997 - 31.08.1998 |
| வ/சிதம்பரபுரம் மகா வித்தியாலயம் | 03.09.1998 - 24.11.1998 |
| வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் | 25.11.1998 - 23.01.2002 |
| வ/விபுலானந்தா மகா வித்தியாலயம் | 24.01.2002 - 31.12.2002 |
| யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் | 01.01.2003 - 14.09.2004 |
| யா/செங்குந்த இந்துக் கல்லூரி | 15.09.2004 - 01.05.2013 |
| யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் | 02.05.2013 - 23.03.2023 |

வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
**யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்**

(15010)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வளவு நிதியைப் பெற்றாலும்

## இலங்கையின் நிலை கடினமானதாகவே இருக்கும்

### மூடிஸ் நிறுவனத்தின் மூத்த பொருளாதார நிபுணர்

(கொழும்பு)

**உலகளாவிய நிதி நிறுவனங்களிடமிருந்து எவ்வளவு நிதியைப் பெற்றாலும் இலங்கையின் நிலைமை மேலும் கடினமானதாகவே இருக்கும் என மூடீஸ் நிறுவனத்தின் மூத்த பொருளாதார நிபுணர் தெரிவித்துள்ளார்.**

சர்வதேச நாணய நிதியம் கடந்த திங்கட்கிழமை இலங்கைக்கு கிட்டத்தட்ட 2.9 பில்லியன் டொலர் நிதியுதவிக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்நிலையில் கண்டிப்பாக இந்த கடன் தொகை இலங்கை நினைப்பது போல் நெருக்கடிக்கு தீர்வாக அமையாது என்றும் இலங்கைக்கு எவ்வளவு நிதியுதவி அல்லது ஆதரவு வழங்கினாலும், இலங்கையின் நிலைமை இன்னும் கடினமானதாகவே இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மின்கட்டணத்தில் மாதந்தோறும் திருத்தம்

### ஜனாதிபதி அறிவிப்பு


(கொழும்பு)

அரச செலவின முகாமைத்துவத்தின் கீழ் அரசாங்க செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிப்பதாகவும் பணவீக்கத்திற்கு ஏற்ப சம்பளம் மற்றும் ஓய்வூதியங்களை மாற்றியமைப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊதிய மாற்றங்கள் முதன்மை இருப்பு வரம்புகளுக்குள் செய்யப்படுகின்றன. எரிபொருள் விலை நிர்ணயம் அரசியல் அதிகாரத்தில் இருந்து முற்றாக நீக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் விலை 2018 விலை சூத்திரத்தின் படி மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. மின் கட்டணம் ஒவ்வொரு மாதமும் எதிர்கால செலவின



மதிப்பீட்டை கணக்கில் கொண்டு சரி செய்யப்படுகிறது" எனவும் தெரிவித்திருந்தார். (நி)

# சுமார் 33,000 ஆசிரியர்களுக்கு மே மாத நடுப்பகுதிக்குள் நியமனம்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மே மாதத்தின் நடுப்பகுதிக்குள் சுமார் 33,000 புதிய ஆசிரியர்களுக்கான நியமனம் நிறைவு பெறும் என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இதேவேளை, அண்மையில் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகளை மாகாண மட்டத்தில் ஆசிரியர்களாக இணைத்துக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மீண்டும் பரீட்சை நடவடிக்கைகளை ஆரம்பிக்க விரிவுரையாளர்கள் தீர்மானம்

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மீண்டும் பரீட்சை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தீர்மானித்துள்ளனர்.

எவ்வாறாயினும், வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை எனவும் ஜனாதிபதியுடன் நடைபெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் அது தொடர்பில் தீர்மானிக்கப்படும் எனவும் பல்கலைக்கழக பேராசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர், பேராசிரியர் சாருதத்த இளங்கசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# தங்கத்தின் விலை சுமார் 10,000 ரூபாவால் வீழ்ச்சி

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளமை காரணமாக தங்கத்தின் விலை சுமார் 10 ஆயிரம் ரூபாயினால் குறைந்துள்ளது.

நேற்று புதன்கிழமை நிலவரப்படி 24 கரட் தங்கத்தின் விலை 165,000 ரூபாயாகவும் 22 கரட் 152,000 ரூபாயாகவும் ஆகவும் பதிவாகியுள்ளது. (நி)


மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை

சிவபூமி திருமந்திர அரண்மனை

திறப்பு விழா - 24.03.2023 மாலை 4.00 மணிக்கு



அன்புடையீர்!

வணக்கம்.

எல்லாம் வல்ல சிவப்பரம் பொருளின் பேரருளால் மட்டக்களப்பு மாவட்டத்தில் வரலாற்று தொன்மை மிக்க கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர பெருமானின் திருவீதியில். "திருமந்திர அரண்மனை" அமைக்கும் பேறு எமக்கு கிடைத்துள்ளது. திருமூலர் சுவாமிகள் அருளிய திருமந்திரத்தின் 3000 பாடல்களையும் கருங்கல்லில் கையால் உளி கொண்டு செதுக்கி காலமெல்லாம் நிலைபெறக் காட்சிப்படுத்தியுள்ளோம்.

உலகத்தில் திருமந்திரத்தை முதன்முதலில் கருங்கல்லில் காட்சிப்படுத்திய பேறு சிவபூமி அறக்கட்டளைக்கு கிடைத்துள்ளது. உன்னத இறையருளாலும், பெரியோர்களின் ஆசியாலும், அன்பர்களின் பேராதரவாலும் இவ் வரலாற்றுக் கைங்கரியம் நிறைவேறியுள்ளது. இத்திருவருளின் சிறப்பை வார்த்தைகளால் கூறும் தகுதியில்லை.

யாம் அறியோம் பராபரமே!

சூரியசந்திரர் உள்ளவரை திருமந்திர அரண்மனை நிலைபெற வேண்டுவோம். இத்திருநாளில் அனைவரும் குடும்ப சமேதராக வருகை தந்து, வரலாற்று பெருவிழாவில் கலந்து கொண்டு திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

-சிவபூமி அறக்கட்டளை-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கையின் முதன்முதலாக திருமந்திர பாடல்கள் முழுவதும் கருங்கல்லில் பதிக்கப்பட்டிருப்பதும், 108 சிவலிங்கங்கள் ஒரேயிடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதும் கொக்கட்டிசோலை சிவபூமி திருமந்திர அரண்மனையின் சிறப்பு அம்சமாகும்.

(15001)

தலைமை அலுவலகம்,
சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்.
தொ.இல: 021 222 7938
Sivapoomi@gmail.com

பரிபாலனசபை,
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்,
கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
தொ.இல: 065 205 6999




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## எலும்புக் கழிவுகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2023

எலும்புக் கழிவுகளை விற்பனை செய்வதற்கான அரக்கு முத்திரை யிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகர சபையால் கோரப்படுகின்றது.

ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்கள் யாழ்.மாநகர சபையில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் விபரத்தைக் குறிப்பிடப்பட்டு மாநகர சபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 06.04.2023ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.

மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,150.00 (வரியுடன்)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 23.03.2023 - 04.04.2023 (மு.ப 9.00 - பி.ப. 3.00 மணி வரை அலுவலக நாட்களில்)

கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 06.04.2023 மு.ப 10.00 மணி வரை

கேள்வி திறத்தல் - 06.04.2023 மு.ப. 10.00 மணிக்கு

| இல | விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கக் கூடிய பிணைவைப்பு | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|
| 01 | எலும்புக் கழிவுகள் | ஒரு கிலோகிராம் ரூபா 7.00 | 5,000.00 | 1 வருடம் |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி இல 0212215978)

ஆணையாளர்
யாழ்.மாநகர சபை.

(C-6212)

# பிரான்ஸ் அணியின் புதிய தலைவரான எம்பாப்வே



பிரான்ஸ் கால்பந்தாட்ட அணியின் புதிய தலைவராக கிலியுன் எம்பாப்வே நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் ஆர்ஜென் டீனாவிடம் பிரான்ஸ் அணி தோல்வியடைந் தது.

இதனைத் தொடர்ந்து பிரான்ஸ் அணியின் தலைவர் ஹியூகோ லோறிஸ் சர்வதேச கால்பந்தாட்டத்திலிருந்து ஓய்வு பெறுவதாக அறி வித்திருந்தார்.

இந்நிலையில், புதிய தலைவராக கிலியன் எம் பாப்வே நியமிக்கப்பட்டுள்ளதாக பிரான்ஸ் கால் பந்தாட்டச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

பயிற்றுநர் டெஸ்சாம்ப் ஸுடனான கலந்து ரை யாடலையடுத்து, அணித் தலைவர் பதவியை கிலி யன் எம்பாப்பே ஏற்றுக் கொண்டுள்ளார். (6)

# ஜேமிசனுக்கு பதிலாக சென்னை அணியில் தென்னாபிரிக்க வீரர்




நியூசிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவர் கெய்ல் ஜேமிசனை ஐ.பி.எல் ஏலத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ரூ.1 கோடிக்கு எடுத்தது.

காயம் காரணமாக ஜேமிசன் ஐ.பி.எல் போட்டி யில் இருந்து விலகியுள்ளார். அவருக்கு பதிலாக தென்னாரிக்காவை சேர்ந்த வேகப்பந்து வீரர் சிசந்தா மகலாவை சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தேர்வு செய்துள்ளது.

அடிப்படை விலையான ரூ.50 லட்சத்துக்கு ஒப்பந்தம் செய்து உள்ளது. மகலா தென்னாபிரிக்க அணிக்காக நான்கு 20 ஓவர் போட்டியில் விளையாடி இருக்கிறார். (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2790

புவனா




தர்சன்




நிருதிகா




சியான்




சங்கவி




மதன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 ஆயிரத்திற்கும் அதிகமான
# தொழில் தேடுநர்கள் கிளி.மாவட்டத்தில் உள்ளனர்
### கிளி.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவிப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழில் தேடுநர்கள் உள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்ற தொழிற்சந்தை நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்.

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் புள்ளி விபரத்திற்கு அமைவாக 2400க்கு மேற்பட்ட தொழில் தேடுநர்கள் இருக்கின்றார்கள். ஒரு லட்சத்து 46 ஆயிரம் சனத்தொகையில் இது சிறிய தொகையாக இருந்தாலும், எம்மிடம் பதிவு செய்யப்பட்ட தொகையாகவே அது காணப்படுகின்றது.

நாட்டமின்மை, விழிப்புணர்வின்மை காரணமாக இத்தொகை குறைவாக காணப்படலாம் ஆனால் என்னைப் பொறுத்த வரை. குறித்த தொகை 10 ஆயிரத்தை தாண்டியதாகவே இருக்கும்.

இந்த நாடு பொருளாதார சுமையிலிருந்து மீள்வதற்கு எங்களை நாங்களே சுயமாக நிறுத்திக்கொள்ளவேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. அதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பையும். உள்ளூரிலேயே எம்மை நிறுத்திக்கொள்ளக்கூடிய நிலைப்பாட்டுக்கும் நாங்கள் மாற வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6-100)

---

சிவமயம் ஓம் நமசிவாய

# வேல் என்பது எல்லாவற்றையும் எது வெல்லுமோ ; அதுதான் திக்கரை முருகன் சிறுகுடிலில் 1760 இல் அமைந்த வேலனைப்பட்டது இன்று பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

மதியால்வித் தகனாகி- மனதாலுத் தமனாகிப்
பதிவாகிச் சிவஞான- பரயோகத் தருள்வாயே;
நிதியே நித்தியனேயென்- நினைவே நற் பொருளாயோய்
கதியேசொற் பரவேளே- கருவூரிற் பெருமாளே.

அருணகிரிநாதர் திருப்புகழ்



என்புத்திகொண்டு நான் ஒரு பேரறிவாள
னாகி, என் மனம் நன்னெறியையே
பற்ற அதனால் நான் ஒரு உத்தம
புருஷனாகி திக்கரை முருகா
சிவ ஞானத்தில் என் மனம் ஊன்று
வதாகி, மேலான யோக வழியை
அருள் புரிவாயாக.திக்கரை முருகா
என் புகலிடமே திக்கரை வேலனே
உலகத்தவர் புகழப்படும் மேலான
செவ்வேலே!

தருமசீலர்ம் பெருமை மிக்க அந்தணப் பெருமக்களும் தொழுவோரும் இறைவன் தந்த வாக்கினால் ஓதுவோம்.



திருவளர் நல்ல கோபுரங் கட்டித்
திருப்பணி பல பிற செய்து
வருபவர், செஞ்சொற் பிரசங்கஞ் செய்ய
வல்லவர், மல்லைதாசர்
தருசுதரவரோ டொழி விலா தென்றும்
சாமிநின் பணியது செய்யப்
பெருமையோடு றைனவாய் திக்கரை முருகா
பிஞ்ஞகா! சரவணபவனே! வேலா!

இறைவன் எழுந்தருளிய இடத்தைக் கோயில் எனவும் ஆலயம் எனவும் அழைக்கிறோம்.கோயில் என்ற பெயர் கோ+இல் எனப் பிரிந்து 'கோ' இறைவன் என்றும் 'இல்' இருப்பிடம் எனவும் பொருள்படும். ஆலயம் என்பது ஆ + 'லயம்' எனப் பிரித்து 'ஆ' ஆன்மா என்றும் 'லயம்' சேருவதற்குரிய இடம். அதாவது ஆணவ மலம் அடங்குவதற்குரிய இடம் எனவும் பொருள் கொள்ளலாம்.

கடவுள் என்னும் பெயர் மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்து நிற்பதாகும். இதைத்தான் அப்பர் பெருமானார்.

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே"

*'எனத் தொடரும் திருத்தாண்டகம்'*



ஆலய அமைப்பு -

ஆகமங்களில் விதிக்கப்பட்ட ஆலய அமைப்பு இரு வகைப்படும். ஒன்று நம் உடல் அமைப்பு, மற்றையது இதய அமைப்பு கோயில்கள். நம் உடம்பு போல் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை "சேஷத்திரம் சரீரப் பிரஸ்தாரம்" என்பர். இதனைத் திருமூலர்-1829

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுர வாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே.**

ஆலயம் என்பது சுவாமி கிடந்த நிலையாகும். கற்பக்கிரஹமானது சிரசாகவும் அந்தராளம் முகமாகவும் ககாசனமானது கழுத்தாகவும் தோள்களானது அர்த்த மண்டபமாகவும் மகாமண்டபமானது வயிறாகவும் பிரகாரமானது கால்களாகவும் கோபுரமானது சுவாமியின் பாதமாகவும் நிர்மாணிக்கப்படுகிறது.ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியும் சுவாமியின் அங்கங்களாகும். ஆகையால் ஆலயத்தின் எல்லாப் பகுதியும் ஆராதிக்கப்பட வேண்டியதாகும்.

நானா வகையான ஊர் வம்புகளைப் பேசி வாழ்நாளை வீழ் நாளாகச் செய்வது நம்முடைய வாழ்நாளில் ஒவ்வொரு நிமிடமும் விலை மதிக்க முடியாத மாணிக்கமாகும்.அதனை அவமே செலவழிக்கக் கூடாது.ஏனைய உயிர்களுக்கு கண்ணுண்டு, காதுண்டு, மூக்குண்டு, குரங்கு, யானை, யாளி இவைகளுக்குகையுண்டு, ஆனால் பேசுவதற்கு அனுகூலமான வாயில்லை.

அந்த வாய் உண்பதற்கு மட்டும் உடையதே. உண்பதனால் கன்மேந்திரியமாகும். உரைப்பதனால் ஞானேந்திரமாகும். உரைப்பது அறிவின் தொழில். இப்படி வேறு உயிர்களுக்கு அமையப் பெறாத உரைப்பதற்கு ஏற்றதாகிய வாக்கியத்தை இறைவன் மனிதப் பிறவிக்கு தந்தான். நாம் அந்த வாக்கினால் இறைவன் புகழை ஓத வேண்டும். ஓம் நமசிவாய.

திருப்புகழ் ஓதி இம்மையிலும் வறுமையிலும்
பெரு வாழ்வு அடைவோமாக.

சூழும் வினைக்கட் டுன்பநெடும் கும்பிணி கழிகாமரு
சோரமிதற் தற்குச் சிந்தை நினந்துறு துணையாதே
ஏழையெனித்துக் கல்களுடன் நின் முழல்வேனோ
ஏதமகற்றிச் செம்பத சிந்தனை தருவாயே
ஆழிய டைத்துத் தங்கையிலங்கையை யெழு நாளே
ஆண்மை செலுத்திக் கொண்ட கரும்புயல் மருகோனே
வேழமு கற்குத் தம்பி யெனுந்திரு முருகோனே
வேத வனத்திற் சங்கரர் தந்தருள் பெருமானே.
-அருணகிரிநாதர் திருப்புகழ்-

எம்மைச் சூழ்ந்துள்ள வினை காரணமாக வருகின்ற துன்பம், நோய் மிகுந்த காமம், களவு, வஞ்சனை இவைகளை மனத்தில் நினைவு கொண்டிருந்தால் எனக்கு உற்ற துணை ஏது உளது. ஏழையாகிய நாம் இத்தகைய துக்கங்களுடன் நாள்தோறும் அலைச்சலறுவேனே! இந்தக் குற்றத்தினை நீக்கி உனது செம்மையான திருவடியைச் சிந்திக்கும் எண்ணத்தைத் தந்தருள்வாய்.

புனரத்தாரணம் நிறைவாகி ஏழாவது கும்பாபிசேகம் திருநிறைவாக நாம் நம் ஊரில் உள்ள திக்கரை முருகனை வணங்கி திருப்புகழ் ஓதி இம்மையிலும் மறுமையிலும் பெருவாழ்வு அடைவோமாக.

(சி-6029)



க.கு.க.சிவபாலன் (K.K.K)
களபூமி-காரைநகர்.

---

# இராசிபலன்

23.03.2023
பங்குனி 09, வியாழக்கிழமை
துதியை முன்னிரவு- 9.10 மணிவரை

ரேவதி பிற்பகல் 4.35 மணிவரை
சுபநேரம் -7.46-9.16 மணிவரை
இராகுகாலம்-1.46-3.16 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம் -
பூரம், உத்தரம்.

**வளவன்**


மேஷம்

விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்,திடீர் பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு,சுப செய்திகள் வந்து சேரலாம், அலைச்சல் சற்று அதிகரிக்கும்.


ரிஷபம்

தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


மிதுனம்

பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும் மனநிறைவு கூடும் நாள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.


கடகம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும்,பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.


சிம்மம்

தொழில் ரீதியாக ஏற்பட்ட குழப்பங்கள் தீர நடவடிக்கை எடுப்பீர்கள்,சிந்தித்து செயற்பட்டு சிறப்படைய வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.


கன்னி

கேளிக்கை கொண்டாட்டங்களில் நாட்டம் காட்டுவீர்கள்,பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், செயற்பாடுகளில் ஆர்வ்ம் காட்டுவீர்கள்.


துலாம்

செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பர்டுபடுவீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு.


விருச்சிகம்

பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


தனுசு

மாற்றினத்தவர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.


மகரம்

ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், உற்சாகத்தோடு செயற்படும் நாள், 'பொருளாதாரநிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும் நாள், சுப காரியப்பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தேவையற்றவிவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.


மீனம்

வழிபாடு ஆனந்தம் தரும்,கனிவாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

**தாயும் தந்தையும் இணைந்து வாழும் போதுமட்டுமே தந்தை குழந்தையை நேசிக்கிறார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு முருகேசு சுவாமியின் 26 ஆம் ஆண்டு குருபூசை தினம்

(யாழ்ப்பாணம்)

தவத்திரு வே.முருகேசு சுவாமியின் 26 ஆம் ஆண்டு குருபூசை தினம் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி சுவாமியின் நினைவுப் பேருரையுடன் கூடிய அறுபத்த மூவர் குருபூசையும் இடம் பெறும்.

வருடாந்த கும்பாபிஷேக தின்ம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் 1008 சங்காபிஷேகமும், சண்முக அர்ச்சனையும் இடம்பெற்று சந்நிதி வேலன் வீதிவலம் வருவார். (நி-6)

## நெடுந்தீவில் நடமாடும் மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையின் மருத்துவ குழாமினால் தீவகப்பிரதேசங்களில் நடமாடும் மருத்துவ சேவையை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையில் நாளை மறுதினம் 25 ஆம் திகதி சனிக்கிழமை மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இம் மருத்துவ முகாமில் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களை இனங்காணும் பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளது.

எனவே நெடுந்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மேற்படி மருத்துவ முகாமில் பங்குபற்றிப் பயன் பெறுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (நி-6)

## படவரைஞர்களைப் பதிவு செய்தல்-2023

இவ்வருடம் யாழ்.மாநகரசபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் கீழ்வரும் விடயங்களினைக் கருத்திற்கொண்டு, உரிய ஆவணங்களுடன் எதிர்வரும் 23.03.2023 தொடக்கம் 06.04.2023 ஆம் திகதி மதியம் 3.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ள பட்சத்தில் உரிய சான்றிதழுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம். அத்துடன், NVQ-4 தேசிய சான்றிதழ் தர படவரைஞர் (கட்டடம்) கற்கை நெறியினை பூர்த்தி செய்துள்ளவர்கள் "இவ்வருடத்திற்குள் (31.12.2023) NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்" எனும் நிபந்தனையுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- மேலும், ஏற்கனவே இவ்வருடம் (2023) பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்கள், NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை பூர்த்தி செய்திருப்பின் உரிய சான்றிதழினை சமர்ப்பிக்கப்பட வேண்டும் அல்லது NVQ-4 தேசிய சான்றிதழ் தர படவரைஞர் (கட்டடம்) சான்றிதழுடன் "இவ்வருடத்திற்குள் (31.12.2023) NVQ-5 in Drafting Technology (Buildings) கற்கை நெறியினை தொடர்வதனை உறுதிப்படுத்தும் கடிதத்தினை கல்வி நிறுவனத்திடமிருந்து பெற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்" எனும் நிபந்தனையுடன் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
- மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் பட்சத்தில் எமது மாநகர சபையில் 2023 ஆம் ஆண்டிற்கான படவரைஞர்களாக செயற்பட முடியாது.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ்.மாநகரசபை.**

(C-6206)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம் ஆதனப் பெயர்மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம் 08, கச்சாய் வீதி, 123 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் பொன்னம்பலம் குமாரசாமி என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் காணப்படுகிறது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை கல்லூரி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த சிவமலர் குமாரசாமி, பிரசித்த நொத்தாரிசு முகதாவில் 24.07.1989 ஆம் திகதியிடப்பட்ட 9240 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனக்குரியது என வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் இந்துக்கல்லூரி ஒழுங்கை, தற்போது லண்டன் பீச்சஸ் றோட்டில் வசித்து வரும் பொன்னம்பலம் குமாரசாமி மகள் சிவமலரின் அற்றோனி தத்துவக்காரர் சாவகச்சேரி மட்டுவில் தெற்கு சோமசுந்தரம் சண்முகநாதன் மூலம் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய செல்வி.சி.தம்பித்துரை முகதாவில் 30.04.1990 ஆம் திகதியில் 1172 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் சிதம்பரப்பிள்ளை சிவராசா பெண் பத்மேஸ்வரிக்கு அறுதியாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரி கோயிற்பற்று சாவகச்சேரி இஸ்ற. "குலைக்காடு வளவு" நிலப்பரப்பு பத்தொன்பது (19). குளி இரண்டு (2). இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் டி.பி.அன்ட் அவர்களால் 1980 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 11 ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 638 ம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டுகள் 1.2.3.4.5 என விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இதில் துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் விசாலம் நி.பர. 2 குளி 15. இதில் நி.பர 2 குளி 15 இற்கும் எல்லைகள்.

வடக்கு : குறித்த நிலஅளவைப்படத்தின் பிரகாரம் ஆண்து 2 என சுட்டப்பட்ட ஆதனம்.
கிழக்கு : குறித்த 638ம் இலக்க நிலஅளவைப்படத்தின் பிரகாரம் விடப்பட்ட ஒழுங்கை.
தெற்கு : சாவகச்சேரி கச்சாய் வீதி.
மேற்கு : குறித்த நிலஅளவைப்படத்தின் பிரகாரம் ஆண்து 4 என சுட்டப்பட்ட ஆதனம்.

தற்போது சிதம்பரப்பிள்ளை சிவுராசா பெண் பத்மேஸ்வரி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலா சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளரது பெயருக்குப் பதிலாக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.சீராளன், செயலாளர்,**
**நகராட்சி மன்றம், சாவகச்சேரி.**

## 26 ஆம் ஆண்டு குருபூசை

### தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களின் 26 ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு



வே.முருகேசு சுவாமி

மேற்படி குருபூசை நிகழ்வானது 29.03.2023 புதன்கிழமை ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும். விஷேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் சுவாமி அவர்களின் நினைவுப்பேருரையுடன் கூடிய அறுபத்துமூவர் குருபூசையும் இடம்பெறும்.

சுவாமி அவர்களின் ஞாபகார்த்தமாக இடம்பெறும் வருடாந்த கும்பாபிஷேக தினம் 24.03.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் ஸ்ரீசெல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும். 1008 சங்காபிஷேக நிகழ்வுடன் கூடிய சண்முக அருச்சனையும் சந்நிதி வேலவனது வீதி வலமும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதான நிகழ்வும் இடம்பெறும்.

சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியவர்கள் மேற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளிலும் பங்குபற்றி குருஅருளையும் திருஅருளையும் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**செல்வச்சந்நிதி,**
**தொண்டைமானாறு.**

(14977)

**சுவாமி அவர்களின்**
**அடியவர்கள் சார்பில்**
**ஆ.அருணாசலம்.**

## அறிவித்தல்

### கன்டெய்னர் பெட்டி விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை

முல்/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்திற்குச் சொந்தமான கன்டெய்னர் பெட்டி ஒன்று மூடிய கூறுவிலை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. மேற்படி கன்டெய்னர் பெட்டியினை முல்/ புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதியில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் வேலை நாட்களில் 2023.03.23 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 2023.04.06 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணிவரை பார்வையிட முடியும். கன்டெய்னர் பெட்டியின் அடிப்படை மதிப்பீட்டு விலை ரூபாய் 125000.00 ஆகும்.

மூடிய கூறுவிலைகள் யாவும் பதிவுத்தபால் மூலம் "தலைவர் ப.நோ.கூ.சங்கம், புதுக்குடியிருப்பு" என்னும் விலாசத்திற்கு 2023.04.10 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கன்டெய்னர் பெட்டிக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். 2023.04.10 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. கூறுவிலைகள் 2023.04.17 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு விண்ணப்பதாரிகள் முன்னிலையில் திறக்கப்பட்டு கூடுதலான கேள்விக்குரியவருக்கு கன்டெய்னர் பெட்டி வழங்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கோரிக்கையாளர் 5 நாட்களுக்குள் முற்றாக பணத்தைச் செலுத்திப் பெட்டியை அப்புறப்படுத்த வேண்டும். விண்ணப்பத்தில் தொலைபேசி இலக்கம் குறிப்பிடுதல் வேண்டும்.


**திரு.வ.அன்னலிங்கம்,**
**தலைவர்,**
**புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்,**
**புதுக்குடியிருப்பு.**

(C-6208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியான் ஆச்சிரமத்தால்

# முத்துமாரி அம்பாள் கோவிலுக்கு சுமார் 8 லட்சம் பெறுமதியான காண்டாமணி



(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டம் வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான் முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு ரூபா 842,000 பெறுமதியான வெண்கல காண்டாமணி அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் நேரடியாகச் சென்று குறித்த வெண்கல காண்டா மணியை வழங்கி வைத்தார். (நி)




கடையிற் சுவாமிகள்

ஈழத்துச் சித்தர் மரபில் வந்த
சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளால்
1949 ஆம் ஆண்டு அளவெட்டியில் ஸ்தாபிக்கப்பட்ட



செல்லப்பா சுவாமிகள்

ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம கோயில்



மஹா கும்பாபிஷேகம்

27.03.2023 திங்கட்கிழமை
காலை 9.40 மணிக்கு
ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரம கோயில்
கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.

திருவருள் முன்னிற்க, வணக்கம்!

அமெரிக்க ஹாவாய் சைவ ஆதீன ஸ்தாபகர் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் தனது குரு சிவயோக சுவாமிகளின் ஆசியுடன் 1949 ஆம் ஆண்டு ஸ்ரீ சுப்பிரமுனிய ஆச்சிரமத்தை ஸ்தாபித்தார். ஆச்சிரமத்தில் 1972 ஆம் ஆண்டு சிறு கோயிலாக அமைக்கப்பட்ட பசுபதீஸ்வரர் ஆலயம் 50 வருடங்களின் பின் அக் கோயில் வளாகத்திலேயே புதிதாக அமைக்கப்பட்டு பங்குனி மாதம் 13ம் நாள் (மார்ச் 27) திங்கட்கிழமை காலை 9.40 மணிக்கு மஹா கும்பாபி ஷேகம் நடைபெற திருவருள் கைகூடி உள்ளது. இத் தெய்வீக நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் நமசிவாய

*24.03.2023 (வெள்ளிக்கிழமை)*

காலை 6.30 மணி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பம்.

*25.03.2023 சனிக்கிழமை*

எண்ணெய்க் காப்பு (அடியவர்கள் எண்ணெய் சாத்துதல் ஆரம்பம்)

*26.03.2023 (ஞாயிற்றுக்கிழமை)*

மாலை 6.30 மணிக்கு எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிறைவுறும்.

*27.03.2023 (திங்கட்கிழமை)*

7.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பம்
காலை 9.40-காலை 10.20 மணி வரையுள்ள சுப முகூர்த்தத்தில்
மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.
சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனைப் பாராயணத்துடன்
நிகழ்வுகள் நிறைவுறும்.



யோக சுவாமிகள்



சுப்பிரமுனிய சுவாமிகள்

(14958)


# மகிந்த மற்றும் பசிலுக்கு எதிரான பயணத்தடை நீக்கம்-நீதிமன்றம் உத்தரவு.

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக விதிக்கப்பட்ட பயணத்தடை இனிமேல் தொடராது என குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தர விட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவே காரணம் எனத் தெரிவித்து மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 7ஆம் திகதிக்கு பின்னர் உயர் நீதிமன்றம் பயணத்தடை உத்தரவை நீடிக்கவில்லை என சுட்டிக் காட்டிய சட்டத்தரணிகள் இதனை குடிவரவு குடிய கல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்க கோரினர்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம். இரண்டு பிரதிவாதிகளுக்கு வழங்கப்பட்ட பயணத் தடை இனிமேல் நடைமுறையில் இருக்காது என அறிவித்தது. (நி)

# இந்திய நிதி அமைச்சர்-மிலிந்த மொரகொட சந்திப்பு

(டில்லி)

இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை நேற்று முன்தினம் சந்தித்துள் ளார்.

இந்தியப் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் இலங்கைக்கான உதவிகள் தொடர்பாக 2021 நவம்பர் முதல் அமைச்சர் சீதாராமனுடன் உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட நடத்தி வரும் தொடர்ச்சியான சந்திப்புகளின் அடிப்படையில் இந்தச் சந்திப்பு நிகழ்ந் துள்ளது. (நி)

# நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

தேசிய நீர்வழங்கல் வடிகால்மைப்புச்சபை ஊழியர்களால் இன்று வியாழக்கிழமை பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்கப்படாமையினால் இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுள்ள மெதுவாக பணிபுரியும் தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெ டுக்கப்படுவதாக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தொழிற் சங்கத் தலைவர் உபாலி ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 130 | 100 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 250 | 340 | 450 |
| தக்காளி | 120 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 |
| கோவா | 80 | 80 | 100 |
| கரட் | 100 | 160 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 |
| புடோல் | 160 | 140 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 150 |
| பாகற்காய் | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 300 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 150 | 150 | 150 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 |
| பீற்றூட் | 140 | 150 | 160 |
| கறிமிளகாய் | 350 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 1300 | 1900 | 1500 |
| போஞ்சி | 250 | 250 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 140 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 320 |
| வெங்காயப்பூ | — | 120 | 280 |
| முள்ளங்கி | 80 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 60 |
| ஈரப்பலா | 80 | 140 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 134





அப்படி வெளியேறினாலும், எலும்பும் தோலுமாய், அறிவை அடியோடு இழந்து, வெறும் பித்துக் குளியாகத்தான் வெளியேற முடியும்!

ஆகா! இத்தகைய பேரபாயத்திலிருந்து தப்புவது எப்படி? ஏதாவது யுக்தி செய்து பெரியவர் வருவதற்குள்ளே கோட்டையை விட்டு வெளியேறி விடவேண்டும். பழுவூர் இளையராணியைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை கூட நம் வீரனுக்கு இப்போது போய் விட்டது.

உயிர் பிழைத்து, பாதாளச் சிறைக்குத் தப்பி, வெளியேறி விட்டால் போதும்! ஓலையில்லாவிட்டாலும் குந்தவைப் பிராட்டியை நேரில் பார்த்துச் செய் தியைச் சொல்லி விடலாம். நம்பினால் நம் பட்டும் நம்பாவிட்டால் போகட்டும் ஆனால் தஞ்சைக் கோட்டையை விட்டு வெளியேறுவ தற்கு என்ன வழி?

தான் உடுத்தியிருந்த பழைய ஆடைகள் என்ன ஆயின என்ற சந்தேகம் திடீரென்று வந்தியத்தேவன் மனத்தில் உதயமாயிற்று. தன்னுடைய உடைகளைப் பரிசீலனை செய்து பார்ப்பதற்காகவே தனக்கு இவ்வளவு உபசாரம் செய்து புது ஆடைகளும் கொடுத்திருக்கிறார்கள்! குந்தவை தேவியின் ஒல்ல தளபதியிடம் அகப்பட்டிருக்க வேண்டும் சந்தேகமில்லை.

தான் புலவர்களுடன் திரும்பிப் போய்விடா வண்ணம் தன் கையை இரும்புப் பிடியாக அவர். பிடித்ததின் கா்ரணமும் இப்போது தெரிந்தது. ஒரு ஆளுக்கு மூன்று ஆளாய்த் தன்னுடன் அனுப்பிய காரணமும் தெரிந்தது. ஆகா! ஒரு யுக்தி! உடனே ஒரு யுக்தி கண்டுபிடிக்க வேண்டும்! இதோ தோன்றிவிட்டது ஒரு யுக்தி! பார்க்க வேண்டியதுதான் ஒரு கை! வீரவேல்! வெற்றிவேல்!

வந்தியத்தேவன் சித்திர மண்டபத்தின் பலகணி வழியாக வெளியே பார்த்தான். சின்னப் பழுவேட்டரையர் பரிவாரங்கள் புடைசூழக் குதிரை மேல் வந்து கொண்டிருந்தார். ஆகா! இது தான் சமயம்! இனி ஒரு கணமும் தாமதிக்கக் கூடாது!

வாசற்படிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து சொக்கட்டான் ஆடிய ஏவலாளர்கள் மூவரும் ஆட்டத்தை நிறுத்திவிட்டு எழுந்தார்கள். மாளிகை வாசலில் சின்னப் பழுவேட்டரையர் வரும் சப்தம் அவர்களுடைய காதிலும் விழுந்தது.

வந்தியத்தேவன் அவர்கள் அருகில் நெருங்கி, "அண்ணன்மார்களே! நான் தரித்திருந்த உடைகள் எங்கே?" என்று கேட்டான்.

"அந்த அழுக்குத் துணிகள் இப்போது என்னத்துக்கு? எஜமான் உத்தரவுப்படி புதிய பட்டுப் பீதாம்பரங்கள் உனக்குக் கொடுத்திருக்கிறோமே!" என்றான் ஒருவன்.

"எனக்குப் புதிய உடைகள் தேவையில்லை என்னுடைய பழைய துணிகளே போதும். அவற்றைச் சீக்கிரம் கொண்டு வாருங்கள்!"

"அவை சலவைக்குப் போயிருக்கின்றன. வந்த உடனே தருகிறோம்."

"அதெல்லாம் முடியாது! நீங்கள் திருடர்கள். என்னுடைய பழைய உடையில் பணம் வைத்திருந்தேன். அதைத் திருடிக் கொள்வதற்காக எடுத்திருக்கிறீர்கள் உடனே கொண்டு வாருங்கள். இல்லாவிட்டால்!"

"இல்லாவிட்டால் என்ன செய்து விடுவாய், தம்பி! எங்கள் தலையை வெட்டித் தஞ்சாவூருக்கு அனுப்பி விடுவாயோ? ஆனால் இதுதான் தஞ்சாவூர்! ஞாபகம் இருக்கட்டும்!" "அடே! என் துணிகளை உடனே கொண்டு வருகிறாயா? இல்லையா?"


(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்



## பெரியதை எடு



உழவன் ஒருவன் வீட்டில் வெள்ளாடும் செம்மறி ஆடும் இருந்தன. அவை இரண்டும் நெருங்கிய நண்பர்களாக இருந்தன. எங்கே சென்றாலும் ஒன்றாகவே சென்றன.

தோட்டத்தில் விளையும் செடிகளை எல்லாம் அவை கடித்து நாசம் செய்தன.

கோபம் கொண்ட உழவன், நீங்கள் இனி மேல் இங்கே இருக்கக் கூடாது. இருந்தால் உங்களைக் கொன்று விடுவேன். எங்காவது போய் விடுங்கள், என்று விரட்டினான்.

இரண்டு ஆடுகளும் தங்கள் பொருட்களை ஒரு சாக்குப் பையில் போட்டன. அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டன.

செம்மறி ஆடு வலிமை உள்ளதாக இருந்தது. ஆனால் கோழையாக இருந்தது.

மாறாக வெள்ளாடோ வீரத்துடன் விளங்கியது. ஆனால் வலிமை இல்லாமல் இருந்தது.

சிறிது தூரம் நடந்த இரண்டும் ஒரு வயலை அடைந்தன. அங்கே இறந்து போன ஓநாய் ஒன்றின் தலை கிடந்தது.

அந்த ஓநாயின் தலையை எடுத்துக்கொள். நீதான் வலிமையுடன் இருக்கிறாய், என்றது வெள்ளாடு.

என்னால் முடியாது நீதான் வீரன். நீயே எடு, என்றது செம்மறி ஆடு. இரண்டும் சேர்ந்து அந்த ஓநாயின் தலையைச் சாக்கிற்குள் போட்டன.

சாக்கைத் தூக்கிக் கொண்டு இரண்டும் நடந்தன. சிறிது தொலைவில் நெருப்பு வெளிச்சத்தை அவை பார்த்தன.

அந்த நெருப்பு எரிகின்ற இடத்திற்குப் போவோம். குளிருக்கு இதமாக இருக்கும். ஓநாய்களிடம் இருந்தும் நாம் தப்பித்துக் கொள்ளலாம், என்றது வெள்ளாடு.

இரண்டும் நெருப்பு இருந்த இடத்தை நோக்கி நடந்தன. அருகில் சென்றதும் அவை அதிர்ச்சி அடைந்தன.

அங்கே மூன்று ஓநாய்கள் உணவு சமைத்துக் கொண்டிருந்தன.

ஓநாய்கள் தங்களைப் பார்த்து விட்டன. தப்பிக்க வழியில்லை, என்பதை உணர்ந்தன ஆடுகள்.

நண்பர்களே! நீங்கள் நலந்தானே என்று தைரியத்துடன் கேட்டது வெள்ளாடு.

அச்சத்தால் செம்மறி ஆட்டின் கால்கள் நடுங்கின.

நண்பர்களா ஓநாய்கள்? எங்கள் உணவு தயார் ஆகட்டும் அதன் பிறகு உங்களைக் கவனிக்கிறோம். எங்கே ஓடிவிடப் போகிறீர்கள்? என்றது ஒரு ஓநாய்.

இவற்றிடம் இருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தது வெள்ளாடு. செம்மறி ஆடே! இன்று நாம் கொன்றோமே ஓநாய்கள். அவற்றில் ஒன்றின் தலையை எடுத்து இவர்களிடம் காட்டு. நாம் யார் என்பது புரியும்? என்று உரத்த குரலில் சொன்னது அது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் நல்ல தலைவன் தான் தலைவன் என்பதை வார்த்தைகளால் அல்ல செயலால் உணர்த்துபவனாக இருக்க வேண்டும். - *விவேகானந்தர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விமர்சனத்துக்கு ஆளாகும் தனியார் மருத்துவமனைகள்

ஒரு காலத்தில் நம் நாட்டில் இலவச வைத்தியசாலைகளே முதன்மை பெற்றிருந்தன.

தவிர, ஒரு சில தனியார் வைத்தியசாலைகள் இயங்கினவாயினும் அந்த வைத்தியசாலைகளும் ஒரு வகையில் இலவசம் போல நடந்து கொண்டன.

அதிலும் குறிப்பாக மகப்பேறு சார்ந்து தனியார் வைத்தியசாலைகள் முதன்மை வகித்தன எனலாம்.

காலஅசைவில் மருத்துவத்துறை வளர்ச்சியடைந்தபோது நம்மவர்களில் வசதி படைத்தவர்கள் தமிழகத்துக்குச் சென்று அங்குள்ள பிரபலமான வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்த வசதி வாய்ப்புகள் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைகளுக்கு வந்தபோது, கொழும்பில் உள்ள பிரபலமான தனியார் வைத்தியசாலைகளில் நம் உறவுகள் சிகிச்சை பெற்றனர்.

அதிலும் குறிப்பாக இதய சத்திரசிகிச்சைக்காக நம்மவர்கள் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலைகளை நாடினர்.

இவ்வாறாக தமிழகம், கொழும்பு என விரிவடைந்த மருத்துவ வசதிகள் தற்போது வடக்கில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தபோது நம் மக்கள் மிகுந்த ஆறுதலடைந்தனர்.

கடுமையான வருத்தம் காரணமாக இந்தியாவுக்கோ அன்றி கொழும்புக்கோ போக வேண்டியிருந்த சூழ்நிலை இல்லாமல்போய், நம் தாயகத்தில் சிகிச்சை செய்யக்கூடியதான நவீன மருத்துவ வசதிகளும் துறைசார் மருத்துவ நிபுணர்களும் அடங்கிய தனியார் வைத்தியசாலைகள் உள்ளன என்ற திருப்தி வடக்கு மக்களிடம் ஏற்பட்டிருந்தது.

தவிர, இவ்வாறான தனியார் வைத்தியசாலைகள் இருப்பதன் காரணமாக, வசதி படைத்தவர்கள் தனியார் வைத்தியசாலைகளிலும் ஏனையவர்கள் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வட மாகாணத்திலுள்ள இதர அரச மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெறும்போது, வைத்தியசாலைகளில் நோயாளர்களால் ஏற்படக்கூடிய நெருக்கடி நிலைமை தவிர்க்கப்படும் என்றும் நம்பப்பட்டது.

ஆனால் நம் தனியார் வைத்தியசாலைகள் தற்போது அறவிடுகின்ற மருத்துவக் கட்டணங்கள் தொடர்பில் பெரும்பாலானவர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலைகளுடன் ஒப்பிட்டு, குறித்தவொரு சிகிச்சைக்காக அங்கு அறவிடப்படுகின்ற கட்டணத்தையும் அதே சிகிச்சைக்காக இங்கு அறவிடப்படுகின்ற கட்டணத்தையும் சீர்தூக்கி ஆராய்ந்து; நம் வடபகுதியில் மருத்துவக் கட்டணம் மிகவும் அதிகம் என்ற முடிவுக்கு வருகின்றனர்.

இந்த முடிவு அவர்களின் ஆதங்கமாக வெளிப்பட, ஊடகங்களிடம் நியாயம் கேட்டு கடிதம் எழுதுகின்றனர்.

எனவே நம் தனியார்.வைத்தியசாலைகள் மருத்துவக் கட்டணத்தில் நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்.

இல்லையேல் மீண்டும் நம்மவர்கள் சிகிச்சைக்காக கொழும்பை - இந்தியாவை நாடுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதால்; தனியார் வைத்தியசாலை நிர்வாகங்கள் இது தொடர்பில் உடன் கவனமெடுக்க வேண்டும்.

## நீதிபதி வருகை தராததால் எழிலன் வழக்கு ஒத்திவைப்பு

(வவுனியா)

இலங்கையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது இலங்கை இராணுவத்திடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டிருந்த விடுதலைப்புலிகளின் அரசியல் துறை பொறுப்பாளராக செயற்பட்ட எழிலன் உட்பட ஏனையோரை நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

எனினும் நேற்றைய தினம் நீதிபதி வருகைதராமையினால் குறித்த வழக்கு மீண்டும் திகதியிடப்பட்டது. விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக செயற்பட்ட எழிலன் உட்பட இறுதிக் கட்ட போரில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக சரணடைந்த குடும்ப அங்கத்தவர்கள் சார்பில் ஆட்கொணர்வு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அந்த மனுமீதான் தீர்ப்பினை வவுனியா மேல்நீதிமன்றம் கடந்தமாதம் வழங்கியது. அதில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இராணுவத்திடம் சரணடைந்தனர் என்பதற்குரிய ஆதாரங்கள் இருப்பதில் மன்று திருப்தியடைந்தது.

எனவே அத்தகைய நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதுடன், அப்படி முடியாது போனால் அதற்கான காரணங்களை நீதிமன்றில் விளக்கமளிக்குமாறும் வழக்கு திகதியிடப்பட்டது.

எனினும் நேற்றைய தினம் நீதிபதி மன்றுக்கு சமூகமளிக்காமையினால் குறித்த வழக்கு எதிர்வரும் மே மாதத்திற்கு திகதியிடப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி கே.எஸ்.ரட்ணவேல் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அத்துடன் நேற்றைய தினம் இராணுவம் சார்பாக சட்டத்தரணி ஒருவரே மன்றுக்கு சமூகமாகியிருந்ததுடன், வேறு எவரும் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## நரசிங்க வைரவர் ஆலய மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை - கவுணாவத்தை அந்திரானை நரசிங்க வைர வர் ஆலய மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்-2023 நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அதையொட்டி எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை இடம் பெற வுள்ளது. மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9.19 மணிமுதல் 10.41 மணி வரையுள்ள சுப வேளையில் குடமுழுக்கு வைபவம் நடை பெறும். (நி)

## மனித பாவனைக்கு உதவாத பழப்புளி பொதிகள் மீட்பு

### கைதானவருக்கு 90 ஆயிரம் ரூபா தண்டம்

(யாழ்ப்பாணம்)

மனித் பாவனைக்கு உதவாத பழப்புளியை மீள் பொதி செய்த குற்றச்சாட்டில் கைதான நபருக்கு நீதிமன்று 90 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது.

கடந்த ஒக்டொபர் மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாணம் நகர் பகுதியில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் சுகாதாரமற்ற முறையில் பழப்புளி பொதி செய்யப்படுவதாக பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொது சுகாதார பரிசோதகர் சுகாதாரமற்ற முறையில் காணப்பட்ட 6 ஆயிரம் கிலோ பழப்புளியை கைப்பற்றி இருந்தார்.

மறுநாள் 26ஆம் திகதி யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்றில் கைப்பற்றப்பட்ட பழப்புளியையும், அதனை உடைமையில் வைத்திருந்த நபரையும் மன்றில் முற்படுத்தினார்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான், புளியை உடைமையில் வைத்திருந்தவரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டார். அத்துடன் கைப்பற்றப்பட்ட பழப்புளியை பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுமாறும் கட்டளையிட்டார்.

இந்நிலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த சந்தேக நபர் கடுமையான நிபந்தனைகளுடன் 36 நாட்களின் பின்னர் பிணையில் செல்ல நீதிமன்று அனுமதித்தது.

தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைக்களின் அடிப்படையிலும், அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் அறிக்கையில் பழப்புளி வண்டுகள் தாக்கி, மனித பாவனைக்கு உதவாதது என கிடைக்கப்பெற்றதை அடுத்து, புளியை உடைமையில் வைத்திருந்த நபரை குற்றவாளி என கண்டு நீதிமன்று 90 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளது. (ம-7,33)

## பல இலட்சம் ரூபாய் பெறுமதியான போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியில் 10 கிராம் 470 மில்லிகிராம் கெரோயின் போதைப் பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இறம்பைக்குளம் பகுதியில் நேற்று விசேட சோதனையை முன்னெடுத்த போது குறித்த நபரின் உடமையில் இருந்து 10கிராம் 470 மில்லிகிராம் கெரோயின் கைப்பற்றப்பட்டதுடன், குறித்த நபரும் கைது செய்யப்பட்டார்.

வவுனியா தேக்கவத்தை பகுதியினை சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார். மேலதிக விசாரணையின் பின் குறித்த நபரை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-250)

## யா/இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ இந்து ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை மதியம் 1.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் பாடசாலை அதிபர் பி.தனபாலசிங்கம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.இராதாகிருஷ்ணன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். வலய செயற்பட்டு மகிழ்வோம் ஒருங்கிணைப்பாளர் எஸ். சிவகாந்தி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

## யாழில் ஹெரோயினுடன் 21 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் ஹெரோயின் போதைப்பொருளுடன் 21 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ் முலவை சந்திப் பகுதியில் குறித்த நபர் 50 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவரை இன்று நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

## தும்பளை தெற்கில் 12 நாட்களேயான ஆண் சிசு மரணம்

மூச்சடங்கிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பிறந்து 12 நாட்களேயான ஆண் சிசு ஒன்று உயிரிழந்துள்ளது.

தும்பளை தெற்கைச் சேர்ந்த ரொபிகரன் சஞ்சை என்ற சிசுவே உயிரிழந்ததாகும்.

நேற்று புதன்கிழமை (22) காலை சிசு மூச்சடங்கி வாய்கள் திறந்த நிலையில் காணப்பட்டதையடுத்து சிசுவை பெற்றோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் சிசு ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பில் தும்பளை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-7,60)

## இனப் பிரச்சினையை தீர்க்க ஐ.எம்.எப் நிபந்தனை முன்வைக்க வேண்டும்

### செல்வம் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற நிபந்தனையையும் சர்வதேச நாணய நிதியம் முன்வைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின், நீடிக்கப்பட்ட நிதி வசதியின், முதல் தவணை நிதி கிடைத்துள்ளமை தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் அறிவித்ததன் பின்னர் இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்போதுதான் இனப் பிரச்சினை தீர்வதற்கான வாய்ப்புகள் கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரிக்கன் லாம்புடன் போராட்டம் செய்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்



(நெளுக்குளம்)

வவுனியாவில் அரிக்கன் லாம்புடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதிஅபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக குறித்த போராட்டம் முன்னடுக்கப்பட்டது. போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவித்த போது நாம் போராட்டம் ஆரம்பிக்கும் போது அரிக்கன் லாம்புகளையே பயன்படுத்தினோம். எனினும் எமது போராட்ட இடத்துக்கு மின்சார சபையே மின்சாரம் வழங்கியது. தற்போது மின்சாரசபை அதனை நிறுத்தியதுடன் எமது போராட்டத்தை குலைக்க இந்த அரசாங்கம் அடாத்தாக, எம்மை கைது செய்தது. ஆனாலும் எமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அவர்கள் அமெரிக்க உதவியை கோரியதுடன், இந்திய பிரதமர் மோடிக்கு நோபல் பரிசு வழங்குவதற்கும் எதிர்ப்பு தெரிவித்திருந்ததுடன் அமெரிக்கா, ஐரோப்பிய கொடிகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (நி-6-299)

## ‘குருதி கழுவிய குவலயம்’ திருப்பாடுகளின் காட்சி



(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக் காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற திருப் பாடுகளின் காட்சி, இந்த ஆண்டு "குருதி கழுவிய குவலயம்" என்னும் பெயரில் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக் கிழமை முதல் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. இதில் 200 இற்கும் அதிகமான கலைஞர்கள் பங்கு பற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## கிளிநொச்சி மாவட்டத்தில் நெல்உற்பத்தி 4.5 மெற்றிக் தொன்னாக அதிகரிக்க வேண்டும்

### மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன்

(கண்டாவளை)

மாவட்டத்தில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதே அனைவரது நோக்கமாகும் என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு முன்னெடுக்கப்பட உள்ள சிறுபோக நெற்செய்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில், மாவட்டத்தின் நெல்லுற்பத்தியானது ஒரு கெக்ரேயருக்கு 3 தொடக்கம் 3.5 மெற்றிக் தொன்னாக காணப்படுகின்றது.

இதனை எதிர்காலத்தில் 4 தொடக்கம் 4.5 மெற்றிக் தொன்னாக அதிகரிக்க வேண்டும். இவ்வாறு மாவட்டத்தின் உணவு உற்பத்தியை அதிகரிக்க அரசின் புதிய கொள்கைகளுக்கு அமைவாக விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில் நுட்பங்களையும், சேதன முறைகளையும் பயன்படுத்தி உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6-315)


## நெல்லியடி பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் நிரம்பி வழியும் குப்பைத்தொட்டியால் டெங்கு பரவும் அபாயம்

(கரணவாய்)

நெல்லியடி பேருந்து தரிப்பிடத்திற்கு அருகில் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள் போடும் குப்பைத் தொட்டி நிரம்பி வழிவதால் அவ்விடத்தில் நிற்கும் பயணிகள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர்.

குறித்த கழிவு பொருட்கள் போடும் குப்பைத் தொட்டியானது சில மாதங்களாக அகற்றாமல் காணப்படுவதால் துர்நாற்றமும் டெங்கு பரவக் கூடிய ஆபத்தும் காணப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-60)



கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளிற்கான தொழிற்பயிற்சி, உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான மாவட்ட தொழிற்சந்தை நேற்று இடம்பெற்றது.

(படம்-சப்தசங்கரி, தேவானந்தம்)

## வட்டக்கச்சி விநாயகர் வீதியை புனரமைப்பு செய்து தருமாறு போராட்டம்

(முறிகண்டி)

கிளிநொச்சி வட்டக்கச்சி விநாயகர் வீதியை புனரமைப்பு செய்வதற்கான நடவடிக்கையை முன்னெடுக்குமாறு கோரி நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை மக்கள் முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக கூடிய மக்கள், கவனயீர்ப்பில் ஈடுபட்டு மாவட்ட செயலக வளாகத்தை சென்றடைந்தனர்.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சிறிமோகன் உள்ளிட்ட அதிகாரிகள் குறித்த மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, குறித்த வீதியை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு சிலர் இடையூறு விளைவிப்பதாகவும், அதனால் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள், மாணவர்கள் என பலரும் பல்வேறு பிரச்சினைகளிற்கு முகம் கொடுப்பதாகவும் தெரிவித்தனர். (நி-6-100-316)

## கால்நடை திணைக்கள செயற்பாடுகளை முன்னெடுக்க ஆளணி பற்றாக்குறை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைத்திணைக்களத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குரிய ஆளணி வளங்கள் இல்லாத நிலையில் கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்திற்கு 7 வெளிக்கள அலுவலர்கள் தேவையான நிலையில் ஒருவர் மாத்திரமே உள்ளதாகவும் குறித்த திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் அண்மை நாட்களாக கால்நடைகளுக்கு ஏற்பட்ட பெரியம்மை என்ற வைரஸ் தொற்று நோயின் தாக்கம் குறைவடைந்து வருவதாகவும் அடுத்த சில வாரங்களில் இது பூரணமாக கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கான சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)

## சக்கரநாற்காலி கடினபந்து போட்டிக்காக இந்தியா சென்ற முகமட் அலி



(நெளுக்குளம்)

இந்தியாவில் இடம்பெற இருக்கும் சக்கரநாற்காலி கடினப்பந்து இருபது-20 கிரிக்கெட் போட்டிக்கு இலங்கை அணிக்காக வவுனியா மாவட்டத்தில் இருந்து மாற்றுத் திறனாளி நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடமாகாணத்தை பிரதி நிதித்துவப்படுத்தி வவுனியா மாவட்டம் சூடு வெந்தபுலவு கிராமத்தை சேர்ந்தவர் முகமட் அலி. இவர் மாற்றுத்திறனாளிக்கான சக்கர நாற்காலி போட்டியில் இலங்கை அணிக்காக விளையாடி வருகிறார்.

இலங்கை, இந்தியா, நேபால், பங்களாதேஷ் ஆகிய நான்கு நாடுகளை சேர்ந்த அணிகள் கலந்து கொள்ளும் சக்கர நாற்காலி கடினப் பந்து கிரிக்கெட் போட்டியானது இந்தியாவில் நாளை இடம் பெறவுள்ளது. இந்தப் போட்டிக்காக குறித்த அணியானது நேற்று இந்தியா சென்றது.(நி-299)

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



இறப்பு
2022.04.03

நீங்காத நினைவுகளுடன்
அமரர்
விஸ்வலிங்கம் பூபதிராஜா
(திதி: 2023.03.23 பங்குனி மாத "வளர்துதியை")
அன்புத் தந்தையே காணாத் உலகிற்கு
கரைந்து போன கற்பூரமே
வாழ்நாளில் மறக்க முடியாது
உங்களை அப்பா
(14966)

ஆஸ்பத்திரி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

நீங்கா நினைவுகளுடன்
அன்பு மனைவி, அன்பு மகன், மகள்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.எம்.எப் இன்...

ஏற்றுமதி கட்டுப்பாடுகளை நீக்குதல்.

8. அதிக மாற்று விகித நெகிழ்வுத் தன்மை பராமரிக்கப்பட வேண்டும்.
9. மத்திய வங்கி மேலும் சுதந்திரமாக இருக்க வேண்டும்.
10. வலுவான சமூக பாதுகாப்பு வரி அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

(ம-7)

## மின்சாரம்...

குமாரசாமி சுதன்(வயது - 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று புதன்கிழமை மாலை வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட வன்னிச்சை அம்மன் கோவிலடி, உடுப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மேற்தளத்தில் சிற்ப வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவர் இரும்புக் குழாய் ஒன்றினை மேலே உயர்த்த முற்பட்ட சமயம் இரும்பு குழாய் உயரமுத்த மின்கம்பத்தின் கம்பியில் தொடுகையுற்றதால் மின்சாரம் தாக்கியதாக கூறப்பட்டது.

இதில் மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டவரை மீட்டு வல்வெட்டித்துறை ஊறணி வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சடலம் மரண விசாரணைக்காகவும், பிரேத பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60,104)

## தரம் 5 புலமைப்...

களுக்கான பாடசாலை வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி வேம்படி மகளிர் கல்லூரி 154, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 148, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 144, சாவகச்சேரி இந்துக் கல்லூரி 143, முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி 152, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் 143, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம் 142. (ம-7)

## 10 படகுகள்...

கடலட்டை தொழிலில் ஈடுபட்டு வந்த படகுகள் தற்போது தொழிலில் ஈடுபடாமல் நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று அதிகாலை 2 மணியளவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

புத்தளம், தில்லையடி, அல்ஜித்தா எனும் முகவரியில் வசிக்கும் சாகுல் ஹமீது ஜெளபர் என்பவருக்குச் சொந்தமான படகுகளே இவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60)

## வவுனியாவில்...

ஸார் தெரிவித்தனர்.

வவுனியா, நெளுக்குளம் - நேரியகுளம் வீதியில் உள்ள குறித்த இளைஞனின் வீட்டில் எவரும் இல்லாத போது குறித்த இளைஞன் விபரீத முடிவெடுத்து தூக்கில் தொங்கி மரணமடைந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## கிணற்றில்...

இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பரமுநாதன் தக்சயன் என்ற 11 வயதுச் சிறுவனே உயிரிழந்துள்ளான்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு பிரேத பரிசோதனைகளுக்காக சடலத்தை மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ம-7,33,104)

## ஐ.எம்.எப்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.எம்.எப் அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் ஐ.எம்.எப். உடன் விவாதிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

முறையான ஆய்வு மற்றும் ஆய்வு இல்லாமல் எதையும் அங்கீகரிக்க எதிர்க்கட்சிகள் தயாராக இல்லை என எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அத்தோடு அறிக்கை மீதான விவாதத்தின்போது எதிர்க்கட்சி முன்வைக்கும் கருத்துக்களை முறையாக செவிமடுக்க வேண்டும் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், இந்த அறிக்கை குறித்து ஏப்ரல் மூன்றாம் வாரத்திற்குள் பாராளுமன்றம் தனக்கு பதிலளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7)

## பெற்றோல் விலை...

ஏப்ரல் மாதம் மேற்கொள்ளப்படும் விலைச் சூத்திரத்திற்கமைய முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பெற்றோல் விலை 100 ரூபாயினால் குறைக்க தயார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான எரிபொருள் விலைச் சூத்திரத்தின் மூலம் மாத்திரமே எரிபொருள் விலைகள் தீர்மானிக்கப்படும் மற்றும் மின்சாரச் சட்டமூலம் 06 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். (ம-7)

## நடைமுறைப்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை பெற்றுக் கொள்வது தொடர்பில் நேற்று காலை பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளை புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

கடந்த காலத்தை விமர்சிப்பது தனது பணியல்ல என்றும், நாட்டைக் கட்டியெழுப்புவதே தனது பணி எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி, கடந்த கால தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் சட்டதிட்டங்கள் மற்றும் பின்னணியை வகுத்து, எதிர்காலத்தை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றாமல், ராஜபக்ஷவினரைக் காப்பாற்றுவதே தனது நோக்கம் என்று பலர் குற்றம் சாட்டினாலும் இலங்கை கடினமான தொங்கு பாலத்தைக் கடக்க தான் பணியாற்றியதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தான் பிறந்து, வளர்ந்து, கல்வி கற்ற நேசத்துக்குரிய நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் தனக்கு நம்பிக்கை இருப்பதாக மேலும் தெரிவித்த ஜனாதிபதி, கடந்த கால அனுபவங்கள் பலவும் அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியதாகவும் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வது தாய் நாட்டை மீண்டும் உயர்த்துவதற்கான சந்தர்ப்பம் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதன் ஊடாக நாட்டிலுள்ள இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப புதிய பாதை திறக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பணவீக்கம் காரணமாக முழு சமூகமும் எதிர்கொண்டுள்ள அழுத்தங்கள் தொடர்பில் தமக்கு சரியான புரிதல் இருப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, இந்த சிரமங்கள் தற்காலிகமானவை என்றும், தற்போதைய முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்கான பலன்களை மக்கள் விரைவில் பெறுவார்கள் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை பெற்றுக்கொள்வதற்காக அனைத்து சிரமங்களையும் அழுத்தங்களையும் தாங்கிய நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதி இந்த சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்தார். (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1522
வெற்றி இலக்கங்கள்
மகரம் 7 4 0 6 0 1
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1097
U 03 12 57 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.22
சீட்டிழுப்பு இலக்கம் 3309
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
I 04 47 68 69
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1415
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
Q 01 02 11 15 45

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.22
சீட்டிழுப்பு இலக்கம் 376
வெற்றி இலக்கங்கள்
மீனம் 03 31 49 59 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/22
சீட்டிழுப்பு இலக்கம் 5067
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
L 8 2 8 1 8 4
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2042
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.03.22
தினம் புதன்கிழமை
D 07 22 33 39
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,835,020/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.22
சீட்டிழுப்பு இல : 4203
வர்ணம் : ஊதா
ரூ. 5,287,840/-
வெற்றி இலக்கங்கள்
10 32 53 63 T
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,211,156/-
திகதி 2023-03-22
வெற்றி வாரம் 3754
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 09 28 36 45
7287
724
ரூ. 10,900,020/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 20 13 40 52 56
சீட்டிழுப்பு வாரம் 1218
2023.03.22 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 315,561,432.20
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
DLB DEVELOPMENT LOTTERIES

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1907
சீட்டிழுப்பு திகதி 2023-03-22
வெற்றி இலக்கங்கள்
05 21 23 67 F
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 41,240,396.80
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1868
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.03.22
ரூ. 5,928,540/-
வெற்றி இலக்கங்கள்
14 25 26 36 N
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மீனவர்களின் பாதிப்புகளை தமிழகம் புரிந்து கொள்ளவில்லை

## இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகரிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியக் கடற்றொழிலாளர்களின், அத்துமீறி எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறையினால் இலங்கையின் வட பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களே பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை தமிழக மக்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வருத்தமளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் ஜேகப் உடனான சந்திப்பு தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இடம் பெற்ற குறித்த சந்திப்பு தொடர்பாக மேலும் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இலங்கையின் கடல் வளத்தினையும், வட பகுதி தமிழ் பேசும் கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினையும் பாதுகாக்கும் நோக்குடன் இலங்கை கடற்படையினர் மேற்கொள்ளும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக இந்தியாவில் வெளிப்படுத்தப்படும் தவறான கருத்துக்கள் இரண்டு நாடுகளுக்கும் இராஜதந்திர நெருக்கடிகளை ஏற்படுத்தக் கூடியவை எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# பத்திரிகை ஆசிரியர்களுடன் ஜனாதிபதி இன்று சந்திப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பத்திரிகையாசிரியர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பொன்று இன்று ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

இன்று பி.ப 3.30 மணிக்கு இடம்பெறும் இச் சந்திப்பில் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்கள் மற்றும் ஊடகப் பிரதானிகள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விளக்கவுரையாற்றவுள்ளார். (ம)

# பிறை தென்படவில்லை வெள்ளி நோன்பு ஆரம்பம்

நாட்டின் எந்த பகுதியிலும் நேற்று (புதன் கிழமை) புனித ரமழான் மாத தலைப்பிறை தென்படவில்லை என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

இதற்கமைய ஷஹ்பான் மாதத்தை 30 ஆக பூர்த்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், நாளை வெள்ளிக்கிழமை முதலாவது நோன்பு ஆரம்பமாகும் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. (ம-7)

# யாழ் வண்ணையில் அதிசய பிள்ளையார்



கே.கே.எஸ் வீதி தட்டாத்தெரு சந்திக்கு அருகாமையில் உள்ள யாழ். வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் உள்ள அரச மரத்தில் மேற் பகுதியில் பிள்ளையார் முகம் போன்ற உருவம் தோன்றியுள்ளது.

இதனை ஏராளமான அடியவர்கள் பார்த்து வணங்கி செல்கிறார்கள். இதே வேளை ஆலயத்தில் திருப்பணிவேலைகள் நடைபெற்று வருகின்றது.(ம-7)

# தனியார் விடுதி ஊழியர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் உள்ள பிரபல தனியார் விடுதிக்குள் நேற்று முன் தினம் அத்துமீறி நுழைந்த இருவர் விடுதி கணக்காளரை தாக்கி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# சீருடை விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கு இன்று இரண்டாம் கட்ட பாடசாலை சீருடைகள் விநியோகிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது

மேலும், பாடசாலை பாடப்புத்தகமும் இன்று முதல் (23) வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-7.90)


## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயதான உயர் வருமானம் பெறும் விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
மணமகனின் தொலைபேசி எண்/ Whatsapp No
072 969 2625
(15012)


## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 04 - 1955



மறைவு 22 - 03 - 2023

# விநாயகமூர்த்தி ஆறுமுகம்

(ஓய்வு பெற்ற மின்சார சபை ஊழியர்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி ஆறுமுகம் அவர்கள் நேற்று (22.03.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் தவயோகராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம்(பவுனர்), கனகரத்தினம்(கனகு) மற்றும் சண்முகராஜா(கொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார். கௌரிகாந்தி (கௌரி)(கொலண்ட்) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 23.03.2023 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அராலி பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

களவத்துறை வீதி,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்

(15014)


## 2023 ஆம் ஆண்டிற்கான புதிய பிரிவு ஆரம்பம்

வரலாறு மற்றும் குடியியல்
தரம் ஆறு தொடக்கம் பத்து வரையான வகுப்பு
பூநாறி லேன் , கொக்குவில்.
24.03.2023 வெள்ளிக்கிழமை
பி.ப 4.30 மணி
மேலதிக தகவல்களுக்கு : 074 179 3394
(15009)

## இந்திய விசா 14,900/= ரூபா

மிகக் குறைந்த செலவில் மேலதிக ஆவணங்கள் ஏதும் இன்றி எம்மிடம் மூன்று நாட்களில் பெற்று கொள்ளலாம், கடவுச்சீட்டு மற்றும் புகைப்படம் மட்டும் போதுமானது.
(14995)
Happy Travels (pvt) Ltd
Jaffna.
077 087 6265
077 070 2065
021 769 4744

## காணி விற்பனைக்கு

சங்குவேலி தெற்கு காளி கோவிலுக்கு முன்பாக 100 மீற்றர் தூரத்தில் உள்ள காணி விற்பனைக்குண்டு
(தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு
077 101 8023
(15005)

## ஒரு வருட காலமே பாவிக்கப்பட்ட புதிய 250L SISIL Bottle Cooler விற்பனைக்கு உண்டு.

(நியாயமான விலையில்)
தொடர்புகளுக்கு
077 049 1513
(15008)

## ஆசிரியர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல கல்வி நிறுவனம் ஒன்றிற்கு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான ஆரம்பப் பிரிவு வகுப்புக்களுக்கு கற்பிக்கக் கூடிய பாடசாலை ஆசிரியர்கள் தேவை.
தொடர்புகளுக்கு (15000)
077 459 8440

## வேலையாள் தேவை

யாழ் நகரில் அரச பணியாளர்களை கொண்ட குடும்பம் ஒன்றிற்கு காலை 5.30 இலிருந்து 8.00 மணி வரை (2 1/2 மணித்தியாலம்) வீட்டு வேலை செய்யக்கூடிய பெண் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும்.
(15013)
077 903 5663

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கோப்பாய் • மானிப்பாய் • பருத்தித்துறை
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-6214)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER



✓ சம்பளம் - 25000/= தொடக்கம்-50000/=
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள்
(ஆங்கில அறிவு அவசியமானது)
(C-6214)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.